# அழியாத சுதந்தரம்

**மனன வசனம்**

**ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள். 1பேதுரு 1:22.**

**ஆராய்ச்சிக்கு**

**1பேதுரு 1:1,2;**

**யோவான் 3:16;**

**எசேக்கியேல் 33:11;**

**1பேதுரு 1:3–21;**

**லேவி 11:44,45;**

**1பேதுரு 1:22–25.**

ஏப்ரல் 1 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

வேதாகமத்தில் ஒரு புத்தகத்தையோ, புத்தகத்தின் ஒரு பகுதியையோ வாசிக்கும்போது, முடிந்தால் ஒரு சில கேள்விகளைக் கேட்டுப்பார்த்து, பதில்காண்பது அவசியம்.

முதலாவது, அது யாருக்கு எழுதப்பட்டது? இரண்டாவது முக்கியக் கேள்வி, அது எழுதப்பட்டதற்கான குறிப்பிட்ட நோக்கம் என்ன? ஏதாவது குறிப்பிட்ட பிரச்சனையைக் குறித்து விவாதிக்க அந்த எழுத்தாளர் விரும்புகிறாரா? (உதாரணமாக, இரட்சிப்பையும் நியாயப்பிரமாணத்தையும் குறித்த தவறான வேதாகமப் போதனைகளை கலாத்தியருக்கு பவுல் சுட்டிக்காட்டுகிறார்.) புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதிகள் நிருபங்களாக அல்லது கடிதங்களாகதான் எழுதப்பட்டுள்ளன. குறிப்பிட்டு தாங்கள் சொல்ல விரும்பும் செய்திகளைத் தெரிவிக்கவே பொதுவாக மக்கள் கடிதம் எழுதுவதுண்டு.

எனவே, பேதுருவின் நிருபங்களை வாசிக்கும் போது, முடிந்தவரையிலும் அதன் வரலாற்றுப் பின்னணியை அறிவது நல்லது. அவர் என்ன சொல்கிறார்? ஏன் சொல்கிறார்? எல்லாவற்றையும்விட முக்கியமாக, அதில் நமக்குள்ள செய்தி என்ன? இவற்றை அறிய வேண்டும். ஏனெனில், தேவ ஆவியின் ஏவுதலால் நமக்காகவும்தான் அவற்றை அவர் எழுதியுள்ளார்.

பேதுரு அவற்றை எழுதி பல நூற்றாண்டுகள் கடந்திருக்கலாம்; ஆனால், ஏராளமான முக்கியச் சத்தியங்களை முதல் சில வசனங்களிலேயே அவர் வெளிப்படுத்துகிறார்.

2017, ஏப்ரல் 8 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## சிதறியிருக்கிறவர்களுக்கு

'அன்புள்ள ஐயா' என்று துவங்கும் ஏதாவது ஒன்றை வாசிக்கத் துவங்கியதுமே, அது ஒரு கடிதமாகத்தான் இருக்கவேண்டுமெனப் புரிந்துகொள்வோம். அதிக நெருக்கமாக இல்லாத யாராவது ஒருவர்தான் அதை எழுதியிருக்கவேண்டும் என்பதும் புரிந்துவிடும்.

ஒரு கடிதத்தைத் துவங்குவதற்கு இன்று சில வழக்கச் சொற்கள் பயன்படுத்தப்படுவதுபோலவே, முற்காலத்திலும் பயன்படுத்தப்பட்டன. ஒரு பழங்காலக் கடிதத்தைப் போல்தான் பேதுருவும் தன் நிருபத்தைத் துவங்குகிறார். எழுதுகிறவர் யாரென்பதும், எழுதப்பட்டது யாருக்கு என்பதும் சொல்லப்படுகிறது.

***பேதுரு நிருபத்தின் உடனடிப் பின்னணியை அறிந்துகொள்ள 1பேதுரு 1:1 எவ்வாறு உதவுகிறது?***

அந்தக் கடிதத்தை எழுதுவது தானே என்று எடுத்ததுமே பேதுரு தன் பெயரைக் குறிப்பிடுகிறார்; ஆனாலும், 'இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலன்' என்கிற அடைமொழியோடு துவங்குகிறார். பவுலைப்போலவே பேதுருவும், எடுத்ததும் தன் 'தரச்சான்றுகளை' முன்வைக்கிறார்; தன்னுடைய தேவஅழைப்பை வலியுறுத்துகிறார். கலா 1:1; ரோமர் 1:1; எபே 1:1. அவர் ஓர் 'அப்போஸ்தலன்'; அதாவது, 'அனுப்பப்பட்டவர்'; அவரை அனுப்பினவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா என்று தான் இந்தெந்தப் பகுதியின் மக்களுக்கு எழுதியதாகவும் குறிப்பிடுகிறார். ஆசிய மைனரைச் சேர்ந்த இந்தப் பகுதிகள், இன்றைய துருக்கியில் தோராயமாக போஸ்பரஸ் கால்வாய்க்கு கிழக்கில்தான் இருந்திருக்கவேண்டும்.

பேதுரு யூதவிசுவாசிகளுக்கு எழுதினாரா, அல்லது புறஜாதி விசுவாசிகளுக்கு எழுதினாரா என்று வாக்குவாதங்களும் எழும்பி வருகின்றன. 1பேதுரு 1:1இல் டயஸ்போரா எனும் கிரேக்க வார்த்தையை பேதுரு பயன்படுத்துகிறார். அதற்கு, நாடுகடந்து வாழ்ந்தவர்கள், சிதறியிருந்தவர்கள் என்று அர்த்தம்; இயல்பாகவே, முதலாம் நூற்றாண்டில் பரிசுத்த நகரத்திற்கு வெளியே வாழ்ந்துவந்த யூதர்களைச் சுட்டிக்காட்ட பயன்படுத்தப்பட்ட வார்த்தை அது. 1பேதுரு 1:2 இல் வரும் 'பரிசுத்தமாக்கப்படுதல்', 'தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்' ஆகிய வார்த்தைகள் யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும். மற்றவர்களைப் 'புறஜாதியார்' என்று அவர் குறிப்பிடுவதால், யூதர்களுக்காகவே அவர் எழுதியது தெரிகிறது. 1பேதுரு 2:12; 4:3.

'உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தை' என்றோ, 'சென்ற வாழ்நாட்காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டதுபோதும்; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம்' என்றோ அவர் யூதர்களுக்கு எழுதியிருப்பாரா? 1பேதுரு 1:18; 4:3. இவற்றில் பேதுரு சொல்வது, யூதர்களைவிட கிறிஸ்தவர்களாக மாறியிருந்த புறஜாதியாராருக்குத்தான் மிகச் சரியாகப் பொருந்தும் என்று சில வேதாகம விளக்கவுரையாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

யாருக்கு எழுதினார் என்பது அல்ல, என்ன எழுதியிருக்கிறார் என்பதுதான் முக்கியமானது.

***பேதுரு வேறு யாருக்கு எழுதினாரென்றும் 1பேதுரு 1:2ல் சொல்லப்படுகிறது? அவர்களை அவர் எவ்வாறு அழைக்கிறார்?***

---

பேதுரு யூத விசுவாசிகளுக்கு எழுதினாரோ, புறஜாதி விசுவாசிகளுக்கு எழுதினாரோ, ஒன்றைமட்டும் நிச்சயமாகச் சொல்கிறார்: ' பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்' என்று அவர்களை அழைக்கிறார். 1பேதுரு 1:2.

கவனியுங்கள். தேவன் சிலரை இரட்சிப்புக்கும், சிலரை அழிவுக்கும் முன்குறிக்கவில்லை; எனவே பேதுரு இங்குக் குறிப்பிடுகிறவர்கள் தேவனால் இரட்சிப்புக்கென்று தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்றும், மற்றவர்கள் எல்லாம் அழிவுக்கென்று தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்றும் அர்த்தம் அல்ல. வேதாகமம் அப்படிப் போதிக்கவும் இல்லை.

***'தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்' என்று என்ன அர்த்தத்தில் பேதுரு சொல்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; யோவான் 3:16; எசே 33:11 ஆகிய வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன?***

---

ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவது தேவனுடைய திட்டம் என்று வேதாகமம் ஆணித்தரமாகச் சொல்கிறது. உலகத்தைச் சிருஷ்டிக்கும் முன்னரே மனிதர்களுக்காக அத்திட்டத்தை அவர் ஏற்படுத்திவிட்டார்; 'அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்.' எபே 1:4. 'எல்லாரும்' 'தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.' அதாவது, எல்லாரும் தெரிந்துகொள்ளப்பட வேண்டும், யாரும் தொலைந்துபோகக்கூடாது என்பதுதான் தேவதிட்டம். மனித இனம் முழுவதையும் நித்திய ஜீவனுக்கென்றே அவர் முன்குறித்திருக்கிறார். இயேசுவின் பாவநிவாரண பணியில் ஒவ்வொருவரும் பங்கடைய இரட்சிப்பின் திட்டம் போதுமானது; ஆனால், அந்தப் பாவநிவாரணத்தால் தனக்குக் கிடைக்கும் இரட்சிப்பை எல்லாருமே ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதே பிரச்சனை.

தெரிந்துகொள்ளும் தங்கள் சுதந்தரத்தைப் பயன்படுத்தி யாரெல்லாம் இரட்சிப்பை ஏற்றுக்கொள்வார்கள் என்பதை தேவன் முன்னறிவார். அதற்காக, இந்த முன்னறிவை வைத்து அவர்களுடைய தீர்மானத்தை அவர் கட்டாயப்படுத்துவது இல்லை. அதாவது, ஒரு குழந்தை சாக்லேட்டை எடுக்குமா, அல்லது பாகற்காயை எடுக்குமா என்பது அதன் தாய்க்கு முன்னரே தெரியும். அந்தக் குழந்தை சாக்லேட்டை எடுத்தால், அதற்காக அந்தத் தாய்தான் தன் முன்னறிவால் அதைக் கட்டாயப்படுத்தினார் என்று சொல்லமுடியுமா?

நீங்கள் இரட்சிக்கப்படும்படி தேவன் உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்; நமக்குத் தைரியமூட்டுகிற இந்தச் சத்தியத்திலிருந்து நாம் எப்படிப்பட்ட நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளலாம்?

## முக்கியக்கருத்துகள்

*1பேதுரு 1:3-12ல் பேதுரு கூறும் முக்கியக்கருத்து என்ன?*

1பேதுரு 1:1,2ல், தன் நிருபத்தை வாசிக்கிறவர்களை வாழ்த்தும்போதே, பிதாவையும் குமாரனையும் பரிசுத்த ஆவியானவரையும் பேதுரு குறிப்பிட்டுவிடு கிறார். வச 2. 1பேதுரு 1:3-12ன் மையச்செய்தியே தேவத்துவத்தின் மூன்று நபர் கள்தாம். 1பேதுரு 1:3-9ல் பிதாவையும் குமாரனையும்பற்றிப் பேசுகிறார்; 1பேதுரு 1:10-12ல் பரிசுத்த ஆவியானவரை முக்கியப்படுத்துகிறார்.

பிதாவையும் குமாரனையும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையையும்பற்றி எழுதும்போது, பின்னர் தான் பேசப்போகிற பல கருத்துகளை அறிமுகப்படுத்து கிறார். ஆரம்பமாக, கிறிஸ்தவர்கள் புதிதாகப் பிறந்தவர்கள் என்கிறார். 1பேதுரு 1:4; யோவான் 3:7. கிறிஸ்தவர்களின் முழு வாழ்க்கையும் இயேசுவின் உயிர்த்தெ ழுதலால் மாற்றமடைந்திருக்கிறது; ஈடுஇணையற்ற சுதந்தரம் பரலோகத்தில் அவர் களுக்குக் காத்திருக்கிறது. 1பேதுரு 1:3,4. இயேசுவின் உயிர்த்தெழுதல்தான் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு மையம் என்று புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களைப் போலவே இங்கும் வலியுறுத்தப்படுகிறது.

1பேதுரு நிருபத்தை வாசிக்கும் கிறிஸ்தவர்கள் பலர் பாடுகளில் இருந்தாலும், இந்த நம்பிக்கை அவர்களைச் சந்தோஷப்படுத்தும். அக்கினியானது பொன்னைச் சோதித்து, சுத்திகரிப்பதுபோல இந்தப் பாடுகள் அவர்களைச் சோதிக்கிறது; அவர் கள் விசுவாசத்தைச் சுத்திகரிக்கிறது. பேதுருவின் நிருபத்தை வாசிக்கிறவர்கள் இயேசுவை அவருடைய ஊழியக்காலத்தின்போது பார்க்காதவர்களாக இருந்தா லும், அவரை நேசிக்கிறார்கள்; அவரில் நம்பிக்கையாக இருக்கிறார்கள். அவருக் குள்ளான அந்த விசுவாசம் இரட்சிப்பையும், 'அழியாததும் மாசற்றதும் வாடாதது மாகிய சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது' என்கிற வாக்குறுதியை யும் கொடுக்கிறது. 1பேதுரு 1:4,5.

'உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்து' முற்காலத் தீர்க்கதரிசிகளும் தீர்க்கதரிசனம் உரைத்தார்களென கிறிஸ்தவர்களுக்குச் சொல்கிறார். 1பேதுரு 1:10. அந்தக் கிறிஸ்தவர்கள் இப்போது இயேசுவில் அனுபவித்து வந்திருந்த இரட் சிப்புகுறித்து பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் 'கருத்தாய் ஆராய்ந்து பரிசோ தனை பண்ணினார்கள்.' 1பேதுரு 1:10.

தங்கள் விசுவாசத்தின்நிமித்தம் அவர்கள் உபத்திரவப்படும்போது, நன் மைக்கும் தீமைக்கும் இடையேயான நீண்டநெடிய போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்களென்ற உண்மையைச் சுட்டிக்காட்டுகிறார். இறுதியாக, சோதனைகளுக்குமத்தியிலும் அவர்கள்சத்தியத்தில் உண்மையாய் நிலைத்தி ருக்கும்படி உதவ முயல்கிறார்.

'உங்களுக்குச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது' என்று 1பேதுரு 1:5 கூறு கிறது. தனிப்பட்டவிதத்தில் அதுபற்றி யோசியுங்கள்; உங்களுக்கென்று தனியாக, பர லோகத்தில் ஒரு விசேஷித்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அற்புத வாக்குறுதிக்கு தனிப்பட்ட விதத்தில் நீங்கள் எவ்வாறு உங்கள் நன்றியைக் காட்டப்போகிறீர்கள்?

***உங்கள் கிறிஸ்தவ நடத்தையை எது ஊக்கப்படுத்த வேண்டுமென 1பேதுரு 1:13-21 வசனங்கள் கூறுகின்றன?***

---

'ஆகையால்' என்று 1பேதுரு 1:13 ஆரம்பிக்கிறது; எனவே, அதற்கு முன்னர் தான் சொல்லிவந்ததின் தொடர்ச்சியாக அவர் பேசுகிறார். தேவனுடைய கிருபையையும், இயேசு கிறிஸ்துவில் கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கும் நம்பிக்கையையும் பற்றியே பேதுரு பேசிவருகிறாரென நேற்றுப் பார்த்தோம். 1பேதுரு 1:3-12.

இந்தக் கிருபையையும் நம்பிக்கையையும் பெற்றிருப்பதால் 'நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொள்ளுங்கள்' என்கிறார். 1பேதுரு 1:13. அதாவது, இயேசுவில் தாங்கள் பெற்றிருக்கும் இரட்சிப்பின் நிமித்தம் உறுதியாகவும் உண்மையோடும் நிற்பதற்கு அவர்கள் தங்கள் சிந்தைகளை ஆயத்தப்படுத்தவேண்டும்.

***இயேசுவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கிருபையில் பூரண நம்பிக்கைவைப்பது என்றால் என்ன? 1பேதுரு 1:13.***

---

இயேசு மாத்திரமே அவர்களது ஒரே நம்பிக்கை என்கிறார் பேதுரு. பிறகு, கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கும் இரட்சிப்பின்நிமித்தம் அவர்களிடம் காணப்பட வேண்டிய நல்நடத்தையை வலியுறுத்துகிறார். கிறிஸ்தவ நடத்தையை ஊக்குவிக்கும் மூன்று பெரும் காரணிகளை வலியுறுத்துகிறார்: தேவனுடைய குணம் (1பேதுரு 1:15,16), வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு (1பேதுரு 1:17), மீட்பிற்கான விலை. 1பேதுரு 1:17-21.

கிறிஸ்தவ நடத்தையை ஊக்குவிக்கும் முதல் காரணி தேவனுடைய குணம். தேவன் பரிசுத்தர். லேவி 11:44,45லிருந்து பேதுரு மேற்கோள் காட்டுகிறார். 'நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.' 1பேதுரு 1:16. எனவே, இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் பரிசுத்தராக இருக்கவேண்டும். 1பேதுரு 1:15-17.

கிறிஸ்தவ நடத்தையை ஊக்குவிக்கும் இரண்டாவது காரணி, தேவன் பரிசுத்தர் என்பதை உணர்வதால், அவனவனுடைய கிரியைகளின்படி அவர் பட்சபாதமின்றி ஒவ்வொருவரையும் நியாயந்தீர்ப்பார் என்பதை உணர்வது. 1பேதுரு 1:17.

கிறிஸ்தவ நடத்தைக்கான மூன்றாவது ஊக்கக்காரணி, கிறிஸ்தவர்கள் மீட்கப்பட்டவர்கள் என்கிற மாபெரும் சத்தியம்தான். அதாவது, ஈடுஇணையற்ற ஒரு விலைகொடுத்து, விலையேறப்பெற்ற கிறிஸ்துவின் இரத்தத்தால் அவர்கள் வாங்கப்பட்டிருக்கிறார்கள். 1பேதுரு 1:19. இயேசுவின் மரணமானது வரலாற்றில் எதிர்பாராமல் நடந்த ஒரு சம்பவமல்ல, அது உலகத்தோற்றத்திற்குமுன்னரே குறிக்கப்பட்டிருந்தது என்பதை பேதுரு வலியுறுத்துகிறார். 1பேதுரு 1:20.

ஒரு கிறிஸ்தவராக வாழ்வதற்கு உங்களை ஊக்குவிப்பது என்ன? நீங்கள் ஏன் ஒரு கிறிஸ்தவராக இருக்கிறீர்கள் என்று உங்களிடம் கேட்பவருக்கு என்ன பதில்சொல்வீர்கள்? ஏன்? உங்கள் பதில்களை வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.

அடுத்ததாக, பரிசுத்தமும் உண்மையுமான ஒரு வாழ்க்கை வாழ்வதின் உச்சக் கட்டஅர்த்தம் என்னவென்று கிறிஸ்தவர்களை பேதுரு எட்டிப்பார்க்க வைக்கிறார்.

***ஒரு கிறிஸ்தவராக வாழ்வதின் அர்த்தம்பற்றி 1பேதுரு 1:22-25ல் பேதுரு கூறும் முக்கியக் கருத்து என்ன?***

கிறிஸ்தவர்கள் ஏற்கனவே சுத்திகரிக்கப்பட்டு, சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறவர்கள் என்று பேதுரு ஆரம்பிக்கிறார். 'உங்கள் ஆத்துமாக்களைச் சுத்த மாக்கிக்கொண்டவர்கள்.' 1பேதுரு 1:22. 'சுத்தமாக்கு' என்கிற வினைச்சொல், 'பரிசுத்தம்', 'பரிசுத்தத்தன்மை' ஆகிய வார்த்தையோடு நெருங்கிய தொடர்புடையதுதான். முன்னரே 1பேதுரு 1:15ல் தான் சொல்லியுள்ளதோடு தொடர்புள்ளவற்றையேபேசுகிறார். இயேசுமேலுள்ள அர்ப்பணிப்பாலும், ஞானஸ்நானத்தாலும் கிறிஸ்தவர்கள் தங்களை தேவனுக்கென்று ஒதுக்கிவைத்து, தங்களைச் சுத்திகரிக்கிறார்கள் (1பேதுரு 3:21,22). அதன்மூலம் சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள்.

இந்த வாழ்க்கைமாற்றம் அவர்களில் இன்னொரு மாற்றத்தை உண்டாக்குகிறது. இதேபோன்ற மாற்றத்தை விரும்புபவர்களோடு அவர்களை நெருங்கிய ஐக்கியம்கொள்ளச் செய்கிறது. மிகவும் நெருக்கமான உறவு இது; அதனால்தான் அதை விவரிக்க பேதுரு குடும்ப உறவைப் பயன்படுத்துகிறார். சகோதர சகோதரிகளைப் போன்ற சிநேகத்தோடு கிறிஸ்தவர்கள் செயல்படவேண்டும். 1பேதுரு 1:22ல் 'சகோதர சிநேகம்' என்பதற்கு பிலதெல்பியா எனும் கிரேக்க வார்த்தையை பேதுரு பயன்படுத்துகிறார்; அதற்கு 'சகோதர சகோதரிகளைப் போன்ற அன்பு' என்று அர்த்தம். குடும்பங்களில் அத்தகைய அன்புதான் காணப்படும்.

பல்வேறு கிரேக்க வார்த்தைகள் 'அன்பு' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. **ஃபிலியா** என்றால் நட்பு; **எரோஸ்** என்றால் ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான உணர்வுப்பூர்வ அன்பு; **அகாபே** என்றால் பிறர் நலனை நாடுகிற ஒரு சுத்தமான அன்பு. 'ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்' என்று எழுதும்போது அகாபே அன்பை பேதுரு குறிப்பிடுகிறார். 1பேதுரு 1:22. அதாவது, பிறர் நலனை நாடுகிற சுத்தமான அன்பு அது. அதனால்தான் 'சுத்த இருதயத்தோடே' ஒருவரிலொருவர் அன்புகூரச் சொல்கிறார். 1பேதுரு 1:22. அழிவில்லாத வித்தாகிய தேவ வசனத்தால் 'மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுவதால்' இத்தகைய இருதயம் பிறக்கும். 1பேதுரு 1:23; 1பேதுரு 1:3. இத்தகைய அன்பு தேவனிடமிருந்து மாத்திரமே வரக்கூடியது; சுயநலமுள்ள, சுயநாட்டமுள்ள, புதுப்பிக்கப்படாத இருதயத்தால் இத்தைய அன்பை வெளிப்படுத்தமுடியாது; அதனால்தான் 'சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து' சுத்திகரித்துக்கொள்ள பேதுரு அவ்வளவுக்கு வலியுறுத்துகிறார். 1பேதுரு 1:22. இந்தச் சத்தியம் வெறுமனே தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்றல்ல, வாழ்ந்து பார்க்கவேண்டிய ஒன்று.

அதிக அன்புள்ளவர்களாக மாறுவதற்கு நாம் என்ன செய்யலாம்? 'சுத்த இருதயத்திலிருந்து' பிறக்கும் அன்பு நம்மில் வெளிப்படுவதற்கு எப்படிப்பட்ட தீர்மானங்களை நாம் செய்ய வேண்டும்?

பேதுரு நிருபத்தின் முதல் அதிகாரமே வளமிக்க, ஆழமான ஒன்றாக இருக்கிறது; ஏராளமான விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன . பிதாவையும் குமாரனையும் பரிசுத்த ஆவியானவரையும் அறிமுகப்படுத்தி, தேவத்துவத்தின் குணத்தைத் தியானித்தவராக தன் நிருபத்தைத் துவங்குகிறார். பிதாவானவர் தம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராகக் கொடுத்தார்; பரிசுத்தமாக்கப்படுதவற்கும் கீழ்ப்படிவதற்கும் நாம் அவருக்குள் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். இயேசுவின் மரணத்தாலும் உயிர்த்தெழுதலாலும் பரலோகத்தில் அழியாத சுதந்தரம் நமக்கு வாக்களிக்கப்பட்டிருப்பதால் நாம் இயேசுவில் அன்புகூரவும், அவருக்குள் பேரானந்தத்துடன் களிகூரவும் முடிகிறது. கிறிஸ்துவுக்குள் நமக்கு அருளப்பட்டுள்ள இரட்சிப்பின் நிமித்தம் சோதனைகளுக்கு மத்தியிலும் நாம் அதிகமாகக் களிகூர முடிகிறது. "சோதனையும் வேதனையும் அனுபவித்து வந்தவர்களின் விசுவாசத்தைப் பேதுருவின் நிருபங்கள் பெலப்படுத்துகின்றன; புதுத் தைரியத்தைக் கொடுக்கின்றன; பலவிதமான சோதனைகளால் தேவன்மேலிருந்த தங்கள் பற்றை விட்டுவிடவிருந்தவர்களை மீண்டும் நற்கிரியைகளைச் செய்யத் தூண்டுபவையாகவும் இருந்தன." *AA, p 517.* அதேசமயம், பேதுருவும் அவர் நிருபத்தை வாசிக்கிறவர்களும் வாழும் காலம்பற்றி முன்னரே பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசிகள் மூலம் தெரியப்படுத்தினார். அதனால், கிறிஸ்தவர்கள் 'சுத்தமான இருதயத்திலிருந்து' உண்டாகும் அன்புள்ளவர்களாக பரிசுத்தமான வாழ்க்கை வாழவேண்டும், சத்தியத்திற்கு முற்றிலும் கீழ்ப்படியவேண்டும்.

# கலந்துரையாடக் கேள்வி

1. *புதன்கிழமை கடைசிக் கேள்விக்கான பதிலை மீண்டும் தியானியுங்கள். கிறிஸ்தவர்களாக வாழ நம்மை ஊக்கப்படுத்துவது எது? பதில்களில் பொதுவான கருத்துகள் யாவை? வித்தியாசமான கருத்துகள் யாவை?*

2. *இயேசுவின் உயிர்த்தெழுதல்பற்றி முதல் அதிகாரத்தில் இரண்டுமுறை பேதுரு குறிப்பிடுகிறார். 1பேதுரு 1:4,21. நம் விசுவாசத்தில் உயிர்த்தெழுதல் ஏன் மிகமுக்கியமான ஒன்றாக இருக்கிறது?*

3. *'அழியாத சுதந்தரம்' பற்றி பேதுரு சொல்கிறார். பார்க்கவும்: தானி 7:18. அதன் அர்த்தம் என்ன? மறைந்துபோகிற அல்லது உடனடியாக அழிந்துபோகிற இந்த வாழ்க்கையையும் உலகக் காரியங்கள் அனைத்தையும் எண்ணிப்பாருங்கள். நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் சுதந்தரம் உண்மையிலேயே எவ்வளவுக்கு அருமையானது?*

4. *பாடுகளுக்கு மத்தியிலும் நம் விசுவாசம் எவ்வாறு வளரமுடியும்? அதாவது, நமக்குப் பாடுகளை உண்டுபண்ணுபவற்றிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள என்னென்ன தீர்மானங்களைச் செய்யலாம்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)
## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.